2021 பிப்ரவரி 5]

(இ) அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு டாக்டர். எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2021

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2021 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2021 ஆம் ஆண்டு அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம், சென்னை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*